2013 மார்ச் 27]

பொருட்கள் விற்பனை செய்ய, இடம் ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. தேவையான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், சேலம் ஆவின்மூலம் புதிய பாலகங்கள் அமைத்து, ஒன்றியப் பணியாளர்களைக்கொண்டு, பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை மேற்கொள்ளப்படும். மேலும், பாலகங்கள் நடத்த விருப்பமுள்ளவர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டால், நேரடித் தேர்வின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கும் பாலகங்கள் நடத்த உரிமம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை மணிவேல், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

84—

மேம்பாலம்

***990—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியம், மருதையாற்றின் குறுக்கே (அம்பலவார்கட்டளை முதல் சுண்டக்குடி வரை) மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், அம்பலவார்கட்டளை – சுண்டக்குடி ரோடு மருதையாற்றின் குறுக்கே ஏற்கெனவே அமைந்துள்ள பாலமானது வெள்ளக் காலங்களில் நீரில் மூழ்குவதால், 10 நாட்களுக்கும் மேலாக போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு வந்தது. அப்பகுதியிலுள்ள சுமார் 45 கிராமங்கள் அப்பாலம்மூலம் பயனடைந்து வந்தன. அப்பாலம், விவசாயப்

பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்ல வசதியாக இருந்தது. அப்பாலம் மழைக் காலங்களில் நீரில் மூழ்கும்பட்சத்தில், அப்பகுதி மக்கள் விவசாயப் பொருட்களை விற்பனை செய்ய இயலவில்லை; இதனால், அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே, அப்பகுதியில் உயர்மட்டப் பாலம் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 'உங்களுக்காக நான் என்பதோடுமட்டுமல்ல, உங்களால் நான்' என்கின்ற உயரிய நோக்கோடு பணியாற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 14–11–2011 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், அம்மா அவர்களால் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு, மேற்காணும் திட்டத்திற்கு ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடும், நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் வரும் 5–4–2013 அன்று கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டவுடன் விரைவிலே பாலம் அமைக்கும் பணி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரிகால் பெருவளத்தான் வாளெடுத்துப் போரிட்டு வரவழைத்த காவிரியை, வெள்ளைத் தாளெடுத்துப் போரிட்டு வெற்றி கொண்ட தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் தஞ்சை இருக்கிறது; ஆனால், தமிழகமே ஒருநாள் தஞ்சையில் தாய்க்கு நன்றி சொல்ல இருந்தது. தாயின் பேனா தலை குனியும் போதெல்லாம், தமிழகம் தலை நிமிரும் தாயே! முல்லை–பெரியாறு என்றாலும், பாலாறு என்றாலும் தமிழ் என்றாலும், தமிழன் வாழ்வு என்றாலும் தங்கள் விடாமுயற்சியால் வெற்றிதான் தாயே! சாதனைக்கு என்றே இறைவனாய் வந்திருக்கும் எங்கள் இதய தெய்வமே அம்மா! இந்தியா சுதந்திரம் அடைந்த காலம் முதல் எவராலும் முடியாது என்று இருந்த அரியலூர் தொகுதி, சுண்டக்குடி–அம்பலவார்கட்டளை, மருதையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பதற்குப் போராடிய மக்களின் கோரிக்கையை ஏற்று, 10 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த, ஆயிரம் கோடி நிலவே எங்கள் அம்மா! தங்கள் மலர்ப் பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களை அரியலூர் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் சமர்ப்பிக்கின்றேன் தாயே!